## கருத்துக்கணிப்புகள் 2 மாதங்களுக்கு முன்பே வீட்டில் உட்கார்ந்து தயாரித்தவை

### மம்தா விமர்சனம்

**கொல்கத்தா, ஜூன் 3:** மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி நேற்று அளித்த பேட்டி: தற்போது வாக்குப்பதிவுக்கு பிந்தைய கருத்துக்கணிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த கணிப்புகள் எல்லாம் இரண்டு மாதங்களுக்கு முன்பே வீட்டில் உட்கார்ந்து தயாரிக்கப்பட்டவை. இதனால்தான் அவை கள நிலவரத்துடன் ஒத்துப்போகவில்லை.

கடந்த 2016, 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இதுபோன்ற கருத்துக்கணிப்புகள் எவ்வாறு நடத்தப்பட்டன என்பதை நாங்கள் பார்த்தோம். அப்போது, அந்த கருத்துகணிப்புகள் எல்லாம் போலியானவை என்பதை தேர்தல் முடிவுகள் வெட்ட வெளிச்சமாக்கியது. இந்தியா கூட்டணியில் மு.க.ஸ்டாலின், அகிலேஷ் யாதவ், தேஜஸ்வி யாதவ் மற்றும் உத்தவ் தாக்கரே ஆகியோரது கட்சிகள் சிறப்பான வெற்றியை பெறும்.

மாநில கட்சிகளுக்கு எல்லா இடங்களிலும் நல்ல வெற்றி கிடைக்கும் என்றார்.

## இலங்கையில் கனமழைக்கு 15 பேர் பலி

**கொழும்பு, ஜூன் 3:** இலங்கையில் இடி, மின்னலுடன் பெய்து வரும் கனமழை பாதிப்புகளில் 15 பேர் பலியாகினர். இலங்கையில் பருவமழைக்காலம் தொடங்கியுள்ளதால் கடந்த சில தினங்களாக தொடர் கனமழை பெய்து வருகிறது.

தலைநகர் கொழும்பு உள்பட 7 மாவட்டங்களில் 300 மில்லிமீட்டருக்கும் அதிகமாக பலத்த காற்று வீசியது. திடீர் வெள்ளம், கடும் காற்று காரணமாக பல மரங்கள் வேரோடு சாய்ந்தன.

கனமழை, வெள்ளத்தில் 15 பேர் உயிரிழந்த நிலையில், 19,000க்கும் அதிகமானோர் வெள்ளத்தில் சிக்கி தவிக்கின்றனர்.

### மாநிலம் உருவாகி 10 ஆண்டுகள் நிறைவு விழா

# தெலங்கானா 3 மண்டலங்களாக பிரிப்பு

### முதல்வர் ரேவந்த் ரெட்டி அறிவிப்பு

**திருமலை ஜூன் 3:** தெலங்கானா 3 மண்டலங்களாக பிரிக்கப்பட்டது என மாநிலம் உருவாகி 10 ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி நடந்த விழாவில் முதல்வர் ரேவந்த் ரெட்டி அறிவித்தார்.

தெலங்கானா மாநிலம் உருவாகி 10 ஆண்டுகள் நிறைவு பெற்றது. இதை கொண்டாடும் விதமாக நேற்று ஐதராபாத்தில் உள்ள ஆயுதப்படை மைதானத்தில் நடந்த விழாவில் முதல்வர் ரேவந்த் ரெட்டி கலந்து கொண்டு தெலங்கானா போராட்டத்தில் ஈடுபட்டு உயிர் தியாகம் செய்த தியாகிகளின் வீரத் தூணில் மலர் வளையம் வைத்து மரியாதை செய்தார். பின்னர் போலீசாரின் மரியாதை ஏற்றுக் கொண்டு பேசியதாவது:

தெலங்கானா மாநிலம் ஏற்பாடு செய்யப்பட்ட போது 10 ஆண்டுகள் ஐதராபாத், ஆந்திரா, தெலங்கானா மாநிலத்திற்கு ஒருங்கிணைந்த தலைநகராக அறிவிக்கப்பட்டது.

தற்போது 10 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதால் இரு மாநிலத்திற்கான பிரிவினையில் உள்ள நிலுவை பணிகளை விரைந்து சுமூகமான முறையில் தீர்வு காணப்பட்டு பிரிக்கப்படும்.

தெலங்கானா மாநிலம் மூன்று மண்டலமாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் ஐதராபாத் அவுட்டர் ரிங் ரோடு கீழ் உள்ள பகுதி நகர்ப்புற தெலங்கானாவாகவும், அவுட்டர் ரிங் ரோடு முதல் பிராந்திய ரிங் ரோடு பகுதி வரை துணை நகர்ப்புற தெலங்கானாவாகவும், பிராந்திய ரிங் ரோட்டில் இருந்து தெலங்கானா எல்லை வரை கிராமப்புற தெலங்கானாவாகவும் அமைக்கப்படுகிறது.

மூன்று பகுதிகளுக்கும் விரைவில் வளர்ச்சித் திட்டங்கள் அறிவிக்கப்படும். நாங்கள் ஆட்சிக்கு வந்த உடனே அடிமைத்தனத்தை உடைத்து மக்கள் ஆட்சியை வழங்கி வருகிறோம். தெலங்கானா பொது தெலங்கானாவாக மாற்றப்பட்டுள்ளது.

மக்களின் விருப்பங்களை பிரதிபலிக்கும் வகையில் தெலங்கானா சின்னம் மாற்றி அமைக்கப்படும். முசி நதி அழகுபடுத்தும் திட்டம் மூலம் ஆயிரம் கோடியில் நீர்பிடிப்பு பகுதி வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் மண்டலமாக மாற்றப்படும். ஐதராபாத் நகரை உலக வரைபடத்தில் நிலை நிறுத்தும் வகையில் வளர்ச்சியில் சமரசமற்ற முயற்சிகளை மேற்கொள்வோம். தெலங்கானா மாநில மக்களுக்கு சுதந்திர தின வாழ்த்துக்கள்.

தெலங்கானாவின் இருப்புக்கும் சுயமரியாதைக்கும் மகுடம் சூட்டி இன்றுடன் 4 கோடி மக்களின் இதயங்கள் மகிழ்ச்சியில் திளைக்கும் நாள். இதற்காக உயிர் தியாகம் செய்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. 60 ஆண்டு கால கனவை நனவாக்கிய சோனியா காந்திக்கு இந்த நேரத்தில் நன்றி தெரிவிக்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

### ஜெகன்மோகன் மீண்டும் முதல்வராக பதவி ஏற்பார்

# தில்லுமுல்லு செய்து வெற்றி பெற நினைக்கிறார் சந்திரபாபு

### அமைச்சர் ரோஜா பேட்டி

**திருமலை, ஜூன் 3:** சந்திரபாபு தில்லுமுல்லு செய்து வெற்றி பெற நினைக்கிறார் என அமைச்சர் ரோஜா பேசினார்.

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் ஆந்திர மாநில சுற்றுலாத்துறை அமைச்சரும், நடிகையுமான ரோஜா நேற்று காலை சுவாமி தரிசனம் செய்தார். பின்னர் கோயிலுக்கு வெளியே செய்தியாளர்களிடம் அவர் பேசியதாவது: நாடு முழுவதும் மக்களும், ஊடகமும் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்க கூடிய வாக்கு எண்ணிக்கை ஜூன் 4ம் தேதி அன்று முடிவுகள் வெளியாக உள்ளது.

எத்தனை சர்வே முடிவுகள் என்ன சொன்னாலும் நலத்திட்ட உதவிகள் வழங்கியதை வைத்தும், நலத்திட்டம் தொடர வேண்டும் என பெண்கள், மூத்த குடிமக்கள் என திரளாக வந்து இரவு 9 மணி வரை வரிசையில் நின்று வாக்கு பதிவு செய்தனர்.

இது போன்ற நலத்திட்டங்களை எந்த ஒரு முதல்வரும் அறிமுகம் செய்ததில்லை. சந்திரபாபு நாயுடு தேர்தல் நேரத்திலும் தேர்தலுக்குப் பிறகு வாக்கு எண்ணிக்கையிலும் பல்வேறு தில்லுமுல்லுகளை செய்து வெற்றி பெற நினைக்கிறார்.

ஆனால் மக்கள் ஜெகன்மோகன் முதல்வராக வேண்டும் என்ற உறுதியுடன் வாக்குப் பதிவு செய்துள்ளனர். எனவே யார் என்ன செய்தாலும் மக்கள் மனதில் ஜெகன்மோகன் உள்ளார். எனவே அவரே மீண்டும் முதல்வராக பதவி ஏற்பார். இவ்வாறு அவர் பேசினார்.

# மெரினா மெட்ரோ ரயில் நிலைய பணிகள் மும்முரம்

▶ சென்னை மெட்ரோ ரயில் 2-ம் கட்ட விரிவாக்கத்தில் பூந்தமல்லி முதல் கலங்கரைவிளக்கம் வரையிலான மெட்ரோ ரயில் வழித்தடம் அமைக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, சென்னை மெரினா கடற்கரையில் மெட்ரோ ரயில் நிலையம் அமைக்கும் பணி மும்முரமாக நடந்து வருகிறது.

## அருணாச்சலில் மீண்டும் பாஜ... முதல் பக்க தொடர்ச்சி

மனைவி கிருஷ்ணா குமாரி ராய், நம்சி-சிங்கிதாங் தொகுதியில் 5,302 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். முக்கிய எதிர்க்கட்சியான சிக்கிம் ஜனநாயக முன்னணி (எஸ்டிஎப்) கட்சி ஒரு இடத்தில் மட்டுமே வெற்றி பெற்றது. அக்கட்சியின் தலைவரும், முன்னாள் முதல்வருமான பவண் சாம்லிங் போட்டியிட்ட 2 தொகுதியிலும் தோல்வி அடைந்தார். இந்தியாவிலேயே அதிக ஆண்டுகள் முதல்வராக பதவி வகித்த பெருமை பெற்ற சாம்லிங் முதல் முறையாக சட்டப்பேரவைக்கு தகுதி பெறாததால் அவரது அரசியல் வாழ்க்கை கேள்விக்குறியாகி உள்ளது.

எஸ்டிஎப் கட்சியிலிருந்து விலகி எஸ்கேஎம் கட்சியை தொடங்கிய பிரேம் சிங் தமாங், கடந்த 2019ம் ஆண்டு தேர்தலில், எஸ்டிஎப் கட்சியின் 25 ஆண்டுகால ஆட்சிக்கு முடிவு கட்டியவர். தற்போது 2வது முறையாக ஆட்சியை கைப்பற்றி பிரேம் சிங் தமாங் சாதித்துள்ளார். அதே சமயம், இங்கு போட்டியிட்ட தேசிய கட்சிகளான பாஜ, காங்கிரஸ் ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை. கடந்த முறை பாஜவுக்கு 12 எம்எல்ஏக்கள் இருந்தனர். மாநில தலைவரான தில்லி ராம் தபாவும் தோல்வி அடைந்தார். தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இரு மாநில சட்டப்பேரவையையும் கலைத்து அம்மாநில ஆளுநர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

### பிரதமர் மோடி வாழ்த்து

சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அருணாச்சல் மக்களுக்கு நன்றி தெரிவித்த பிரதமர் மோடி, சிக்கிம் முதல்வர் பிரேம் சிங் தமாங்கிற்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். இதுதொடர்பாக தனது டிவிட்டர் பதிவில், "அருணாச்சலுக்கு நன்றி! வளர்ச்சி அரசியலுக்கு வாக்களித்து, பாஜ மீது நம்பிக்கை வைத்து மீண்டும் வெற்றி தேடித்தந்த அருணாச்சல் மக்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் கட்சி, மாநிலத்தின் வளர்ச்சிக்காக இன்னும் வீரியத்துடன் உழைக்கும். பாஜ தொண்டர்களின் கடின உழைப்பிற்கு பாராட்டுக்களை தெரிவிக்கிறேன்" என்றார்.

மற்றொரு பதிவில் அவர், "சிக்கிம் சட்டப்பேரவை தேர்தலில் பாஜவுக்கு வாக்களித்த அனைத்து மக்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வெற்றிக்காக முயற்சித்த தொண்டர்களின் உழைப்பையும் பாராட்டுகிறேன். சிக்கமின் வளர்ச்சிக்கும், மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதிலும் பாஜ கட்சி எப்போதும் முன்நிற்கும்.

தேர்தலில் வெற்றி பெற்ற முதல்வர் பிரேம் சிங் தமாங்கிற்கு வாழ்த்துக்குள். வரும் நாட்களில் சிக்கிம் வளர்ச்சிக்காக மாநில அரசுடன் இணைந்து பணியாற்றுவதை ஆர்முடன் எதிர்பார்த்துள்ளேன்" என்றார்.

## சந்தேஷ்காலியில் மீண்டும் மோதல்

**கொல்கத்தா, ஜூன் 3:** மேற்கு வங்க மாநிலம் பஷீர்ஹாட் தொகுதிக்கு உட்பட்டது சந்தேஷ்காலி. சில மாதங்களுக்கு முன் சந்தேஷ்காலியில் ரேஷன் பொருட்கள் மோசடி வழக்கில் திரிணாமுல் கட்சி பிரமுகர் ஷாஜகான் ஷேக்கை கைது செய்ய சென்றனர். அப்போது அமலாக்கத்துறை அதிகாரிகள் மீது தாக்குதல் நடந்தது. இதை அடுத்து நிலம் பறிப்பு, பாலியல் தொல்லைகள் அளித்த ஷாஜகான் மீது நடவடிக்கை எடுக்க கோரி பெண்கள் போராட்டம் தொடர் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. அங்கு தேர்தல் முடிந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு போலீசாரை தாக்கிய சிலரை தேடி அதிவிரைவு படையினர் சந்தேஷ்காலி சென்றனர். அப்போது போலீசாரை மறித்து அங்கு உள்ள பெண்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

# போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

▶ பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேல் தாக்குதலை தடுத்து நிறுத்தக் கோரி சென்னை எழும்பூர் தாளமுத்து நடராஜன் கட்டிடம் அருகே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன் தலைமையில் நேற்று நடந்த போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்.

### கருத்து கணிப்புகளை பொய்யாக்கும் வகையில்

# இந்தியா கூட்டணிக்கு சிறப்பான வெற்றி கிடைக்கும்

### 11 மாநில காங். தலைவர்கள் உறுதி

**புதுடெல்லி, ஜூன் 3:** மக்களவை தேர்தலின் கடைசி கட்ட வாக்குபதிவு நேற்று முன் தினம் முடிந்தது. இதன் பின் கருத்து கணிப்புகள் வெளியிடப்பட்டன. பெரும்பாலான கருத்து கணிப்புகளில் பாஜ கட்சிக்கு அதிக மெஜாரிட்டியுடன் வெற்றி பெறும். பிரதமர் மோடி 3வது முறையாக ஆட்சி அமைப்பார் என தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், அகில இந்திய காங்கிரஸ் பொது செயலாளர் ஜெய்ராம் ரமேஷ், பல்வேறு மாநில முதல்வர்கள், காங்கிரஸ் தலைவர்கள், கட்சியின் சட்டமன்ற குழு தலைவர்களுடன் காணொலி மூலம் நேற்று கலந்துரையாடினார்.

இதில் பேசிய அசாம் காங்கிரஸ் தலைவர் பூபன் போரா, "மாநிலத்தில் உள்ள மொத்தம் 14 தொகுதிகளில் காங்கிரஸ் குறைந்தது 7 தொகுதிகளில் வெற்றி பெறும். பாஜவில் உள்கட்சி பிரச்னை அதிகம் உள்ளது. இந்தியா கூட்டணி கட்சிகள் இடையே உள்ள ஒற்றுமை அதிக சீட்டுகளை பெற்று தரும்'' என்றார். பஞ்சாப் பேரவை எதிர்க்கட்சி தலைவர் பிரதாப் சிங் பாவேஜா, "பஞ்சாபில் காங்கிரசுக்கு 9 இடங்கள் கிடைக்கும். ஆம் ஆத்மிக்கு ஒரு சீட்டும், கிடைக்கும். இந்தியா கூட்டணிக்கு 10 இடங்கள் கிடைக்கும்" என்றார். இமாச்சல் முதல்வர் சுக்விந்தர் சிங், "2 தொகுதிகளில் காங்கிரஸ் முன்னணியில் உள்ளது. மீதி 2 தொகுதிகளில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. இடைதேர்தல் நடக்கும் 6 பேரவை தொகுதிகளிலும் கட்சி வெற்றி பெறும்" என்றார். இதேபோல் கர்நாடக துணை முதல்வர் டி.கே. எஸ்.சிவகுமார், பீகார் காங்கிரஸ் தலைவர் அகிலேஷ் பிரசாத் சிங், ஜார்க்கண்ட் மாநில தலைவர் ராஜேஸ் தாக்குர், மகாராஷ்டிரா மாநில தலைவர் நானா படோலே, உள்ளிட்ட 11 மாநில காங்கிரஸ் தலைவர்கள் இந்தியா கூட்டனி சிறப்பான வெற்றி பெறும் என்று கூறினர்.

### வானில் தோன்றும் அரிய நிகழ்வு

# ஒரே நேர்க்கோட்டில் 6 கோள்கள்

### இன்றும், நாளையும் பார்க்கலாம்

**சென்னை, ஜூன் 3:** சூரியக் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு கோள்களும் சூரியனை சுற்றி வருகின்றன. இதில் பூமி ஒருமுறை சூரியனை சுற்றிவர 365 நாட்கள் ஆகின்றன. இதேபோல, ஒவ்வொரு கோள்களுக்கும் குறிப்பிட்ட நாட்கள் ஆகின்றன. கோள்களின் சுற்றுவட்டப் பாதையில் ஒன்றை ஒன்று சந்திக்கும் அபூர்வ நிகழ்வுகள் அவ்வப்போது ஏற்படுவது உண்டு. பொதுவாக 3 அல்லது 4 கோள்களை ஒரே நேர்கோட்டில் காணக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

இந்த நிலையில் இன்றும், நாளையும் (ஜூன் 3, 4 தேதிகளில்) கிழக்கு திசையில் சூரிய உதயத்துக்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பாக வியாழன், புதன், யுரேனஸ், செவ்வாய், நெப்டியூன், சனி ஆகிய 6 கோள்கள் ஒரே நேர்க்கோட்டில் வர உள்ளன. இதில், புதன், செவ்வாய், வியாழன், சனி ஆகிய கிரகங்களை நாம் வெறும் கண்ணால் பார்க்கலாம். யுரேனஸ் மற்றும் நெப்டியூனானது பூமியை விட்டு அதிக தொலைவில் இருப்பதால் அதனை வெறும் கண்களால் பார்க்க முடியாது எனவும், தொலை நோக்கியின் உதவியுடன் பார்க்கலாம் எனவும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

### 'வளர்ச்சி அடைந்த இந்தியா' உருவாக்க

# அடுத்து வரும் 25 ஆண்டுகளை நாட்டுக்காக அர்ப்பணிப்போம்

### பிரதமர் மோடி அழைப்பு

**புதுடெல்லி, ஜூன் 3:** மக்களவை தேர்தல் பிரசாரத்தை முடித்துக்கொண்ட பிரதமர் மோடி, கடந்த மாதம் 30ம் தேதி முதல் கடந்த 1ம் தேதி வரை கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் மண்டபத்தில் தியானம் செய்தார். பின்னர் கடந்த 1ம் தேதி மாலை 4.15 மணிக்கு விமானம் மூலம் டெல்லிக்குபுறப்பட்டார். தனது விமான பயணத்தில் சுமார் 3 மணி நேரம் நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:

அமிர்த காலத்தின் முதல் தேர்தலாக இந்த மக்களவை தேர்தல் நடந்துள்ளது. இப்போது என் மனம் பல அனுபவங்களாலும் உணர்ச்சிகளாலும் நிரம்பி உள்ளது. எனக்குள் எல்லையில்லா ஆற்றல் ஓட்டத்தை உணர்கிறேன். கன்னியாகுமரியில் தியான நிலைக்கு சென்றதும், சூடான அரசியல் விவாதங்கள், எதிர்தாக்குதல்கள், குற்றச்சாட்டுகளின் குரல்கள் அனைத்தும் மறைந்து வெற்றிடமாகமாறின. எனக்குள்ளே எதன் மீதும் பற்றில்லாத உணர்வு வளர ஆரம்பித்தது. என் மனம் வெளி உலகத்திலிருந்து முற்றிலும் விலகியது.

இந்தியாவின் பிரகாசமான எதிர்காலம், இலக்குகள் பற்றி என் மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது. குமரியில் உதிக்கும் சூரியன் என் எண்ணங்களுக்குப் புதிய உயரங்களைத் தந்தது. கடலின் பரந்த தன்மை என் எண்ணங்களை விரிவுபடுத்தியது.

கன்னியாகுமரி தேசத்தின் கருத்தியல் சங்கமம். இங்கு விவேகானந்தர் நினைவிடம், திருவள்ளுவரின் பிரமாண்ட சிலை, காந்தி மண்டபம் மற்றும் காமராஜர் மணிமண்டபம் ஆகியவற்றைக் காணலாம். அவர்களின் சிந்தனை ஓட்டங்கள் தேசிய சிந்தனையின் சங்கமமாக இங்கு சங்கமிக்கிறது. இது தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான பெரும் உத்வேகத்தை உருவாக்குகிறது. இந்தியாவின் ஒற்றுமை உணர்வை சந்தேகிக்கும் எவருக்கும் அழியாத செய்தியை கன்னியாகுமரி தருகிறது.

ஒரு கணத்தையும் வீணாக்காமல், பெரிய கடமைகள் மற்றும் பெரிய இலக்குகளை நோக்கி முன்னேற வேண்டும். நாம் புதிய கனவுகளை காண வேண்டும், அவற்றை நிஜமாக்க அந்த கனவுகளை உயிர்ப்பிக்க வேண்டும். இந்தியாவில் நாம் பிறக்க கடவுள் நமக்கு அருளினார் என்பதை ஒவ்வொரு நொடியிலும் பெருமை கொள்ள வேண்டும். தேசத்திற்கு சேவை செய்யவும், தேசத்தின் சிறப்பை நோக்கிய பயணத்தில் நமது பங்கை நிறைவேற்றவும் கடவுள் நம்மை தேர்ந்தெடுத்துள்ளார். அடுத்த 50 ஆண்டுகளை தேசத்துக்காக அர்ப்பணிக்க வேண்டும் என்று 1897ல் சுவாமி விவேகானந்தர் அழைப்பு விடுத்தார். இந்த அழைப்புக்கு சரியாக 50 ஆண்டுகளுக்குப் பிறகு, 1947ல் இந்தியா சுதந்திரம் பெற்றது. இன்று அதே பொன்னான வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது. அடுத்த 25 ஆண்டுகளை நாட்டுக்காக அர்ப்பணிப்போம். நமது முயற்சிகள் வரும் தலைமுறைகளுக்கும், நூற்றாண்டுகளுக்கும் வலுவான அடித்தளத்தை உருவாக்கி, இந்தியாவை புதிய உயரத்திற்கு கொண்டு செல்லும். நாட்டின் ஆற்றலையும், உற்சாகத்தையும் பார்க்கும்போது நமது இலக்கு வெகு தொலைவில் இல்லை என்றே சொல்லலாம். விரைந்து செயல்படுவோம். ஒன்றுபட்டு வளர்ந்த இந்தியாவை உருவாக்குவோம்.

இவ்வாறு பிரதமர் மோடி கூறி உள்ளார்.

## டெல்லி ஆம் ஆத்மி அலுவலகத்தில் தீ

**புதுடெல்லி, ஜூன் 3:** திகார் சிறைக்கு செல்லும் முன்பாக, ஆம் ஆத்மி கட்சி அலுவலகத்தில் தொண்டர்களை டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் சந்தித்தார்.

இந்நிலையில், நேற்று மாலையில் ஆம் ஆத்மி அலுவலகத்துக்கு வெளியே வைக்கப்பட்டு இருந்த ஜெனரேட்டரில் திடீரென தீ பற்றியது. பின்னர், கட்சி அலுவலகத்துக்கும் அது பரவத் தொடங்கியது. இது தொடர்பாக, மாலை 4.31 மணிக்கு தீயணைப்புத் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதும், தீயணைப்பு வீரர்கள் அங்கு விரைந்தனர். அரை மணி நேரத்தில் தீ அணைக்கப்பட்டு விட்டது. ஆம் ஆத்மி அலுவலகத்துக்கு தண்ணீர் பீச்சியடிக்கும் வாகனத்தை போலீசார் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நிறுத்தி வைத்திருந்தனர். அதில் இருந்த தண்ணீரை பயன்படுத்தி, ஜெனரேட்டரில் ஏற்பட்ட தீயை போலீசார் அணைத்தனர்.

ICICI Home Finance

கார்ப்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், ஐசிஐசிஐ எச்டிஎப்சி டவர், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை-400059, இந்தியா

கிளை அலுவலகம்: இரண்டாவது தளம், கதவு எண்.20 காக்கான் தெரு, மேற்கு தாம்பரம், சென்னை-600045

கிளை அலுவலகம்: மூன்றாவது தளம், எம்.டி.ராஜன் ஸ்கொயர், கதவு எண்.40, பசுல்லா சாலை, தி.நகர், சென்னை-600017

[விதி 8(6) விதிமுறையை காண்க]

**அசையாச் சொத்துகள் விற்பனை அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீந்தோரிடம் அடமானம் வைக்கப்பட்ட/உரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் **கையக சுவாதீனம்** செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

| வ. எண் | கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர். கடன் கணக்கு எண் | தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள் | நிலுவைத் தொகை | நிர்ணய விலை / முன்வைப்புத் தொகை | சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம் | ஏலம் நாள் & நேரம் |
|---|---|---|---|---|---|---|
| (A) | (B) | (C) | (D) | (E) | (F) | (G) |
| 1. | S.பார்வதி (கடன்தாரர்) சிவசுப்ரமணியம் (உப-கடன்தாரர்) கடன் கணக்கு எண் LHANC00001334233 & LHANC00001334627 | பிளாட் எண்.1, தரைதளம், மனை எண். 39&40B வடக்குப் பகுதி கதவு எண், 39/1, வ.உ.சி தெரு, காந்தி நகர் சாலிகிராமம், சென்னை, தமிழ்நாடு 600093 | Rs. 27,80,336/- மே 16, 2024 | Rs. 19,80, 000/- / Rs. 1,98,000/- | ஜூலை01, 2024 காலை 11.00 மணி - பிற்பகல் 03.00 மணி | ஜூலை 10, 2024 பிற்பகல் 02.00 மணி - 03.00 மணி |
| 2. | ரம்யா (கடன்தாரர்) லாரிஷ் அலல்ராஜ் F (ஜாமீன்தாரர்) கடன் கணக்கு எண். LHANC00001330626 | மனையில் உள்ள வீடு எண் 1A, புதிய கதவு எண்.20, பழைய கதவு எண்.19-A, T S எண்.6, பட்டாவின்படி T S எண் 6/16, பிளாக் எண்.2, புலியூர் கிராமம், எழும்பூர் தாலுகா, சென்னை மாவட்டம் தமிழ்நாடு சென்னை-600028 | Rs. 96,70,179/- மே 16, 2024 | Rs. 1,05,28, 875/- / Rs. 10,52, 890/- | ஜூலை01, 2024 காலை 11.00 மணி - பிற்பகல் 03.00 மணி | ஜூலை 10, 2024 பிற்பகல் 02.00 மணி - 03.00 மணி |

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை **குளோப் டெக்** இணையதளத்தில் (URL Link-https://BestAuctionDeal.com) நடத்தப்படும். அடமானதாரர்களுக்கு/அறிவிப்பு மூலம் **ஜூலை 09, 2024 மாலை 05.00 மணிக்கு** முன்பு வரை மொத்த நிலுவைகளை மேற்கொண்டு வட்டியுடன் செலுத்த ஒரு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.

எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், இரண்டாவது தளம், கதவு எண்.20 காக்கான் தெரு, மேற்கு தாம்பரம், சென்னை-600045** இடத்தில் **ஜூலை 09, 2024** மாலை **04.00** மணிக்குள்ளாகவோ அல்லது அதற்கு முன்போ முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் E காண்க) சமர்ப்பிக்க வேண்டும். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) பதிவு படிவம், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் வரையறைகள் படிவம் ஆகியவற்றை **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், இரண்டாவது தளம், கதவு எண்.20 காக்கான் தெரு, மேற்கு தாம்பரம், சென்னை-600045.** இடத்தில் **ஜூலை 09, 2024 மாலை 05.00** அல்லது அதற்கு முன்பு கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத் தொகை கேட்பு வரைவோலை (DD) ஒரு தேசியமயாக்கப்பட்ட/ அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து **சென்னையில்** மாற்றத்தக்க வகையில் "ICICI Home Finance Company Ltd.- Auction" என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.

சொத்து பார்வையிடுதல், ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து கூடுதல் விவரங்களுக்கு, **9920807300 எண்ணில் ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தையோ** அல்லது எங்கள் **விற்பனை & சந்தைப்படுத்துதல் கூட்டுதாரர் நெக்ஸ்லென் சொலூசன்ஸ் பிரைவேட் லிமிடெட்** அவர்களையோ தொடர்பு கொள்ளவும். அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டு காரணங்களையும் தெரிவிக்காமல் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை கொண்டுள்ளார். விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, காண்க https://www.icicihfc.com/

நாள் : ஜூன்03, 2024
இடம் : சென்னை

அதிகாரப்பூர்வ அதிகாரி
ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்